**றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டம் - 2017**

றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டமானது நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் நிறைவேற்றப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்டது. சப்ரகமுவ மாகாணம் மற்றும் மேல்மாகாணத்தின் ஒரு பகுதியின் போக்குவரத்து உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்காக சப்ரகமுவ மாகாணம் மற்றும் மேல்மாகாணத்தின் ஒரு பகுதியையும் மேவுகை செய்வதற்கு தென் அதிவேகபாதை மற்றும் மத்திய அதிவேகபாதைக்கும் இனைக்கும் புதிய அதிவேகபாதையை நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) தொடர்ந்து செல்லும் அடிப்படையை காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து உருவாகும் செம்மையாக்கல்களின் தாக்கங்களை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

## 3. நிதிசார் மற்றும் செயலாற்றல்

### 3.1 நிதியங்களின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக 2017ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 120 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது அதில் ரூபா 92.10 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேல் மாகாணத்திலுள்ள கஹதுடுவயிலிருந்து சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பலமடுள்ள வரையான றுவான்புற அதிவேகபாதையின் 73.90 கிலோமீற்றர் நிர்மான வேலைகள் 2014 அக்டோபர் 10 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நிர்மான வேலைகள் 04 பகுதிகளாக

பிரிக்கப்பட்டு சிவில் கட்டுமான வேலைக்கான எதிர்கால ஒப்பந்தக்காரர்கள் சீன அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட குறிக்கோள்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் அடைந்துகொள்வதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு பௌதிக மற்றும் நிதி இலக்குகளுடன் அடிப்படை பணியாளர்களின் பொறுப்புக்களை தெளிவாக அடையாளம் காணக்கூடிய விரிவான ஒட்டுமொத்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் அமுல்படுத்தும் நிறுவனமானது அதிவேகபாதையை நிர்மானிப்பதற்கான சாத்தியவள ஆய்வுகனை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன் ஆலோசனை சேவைக்காக இதனை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் துனைக் கம்பனியினால் ஆலோசனை சேவைக்காக 2014 நவம்பர் 10ம் திகதி ரூபா 394.29 மில்லியன் செலவில் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்செயற்திட்டமானது அளவை வேலை, விசாரணை, ஆரம்ப வடிவமைப்பு, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற சேவைகளை வழங்குவதை உடன்படிக்கையில் உள்ளடக்கியுள்ளது. இருப்பினும், ஒப்பந்தங்களின் கீழான அனைத்து நடவடிக்கைகளும் 2016ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவுசெய்யப்பட வேண்டும், தொடர்புபட்ட அறிக்கைகள் 22 மாதங்கள் தாமதமாக 2018 ஜனவரி மாதமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 58 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த அளவை வேலைகள் ஆலோசகரினால் செயற்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாத்திய வள ஆய்வின் கீழான அதிவேகபாதையினுடைய நீரியல் ஆய்வு மீதான அறிக்கையானது ரூபா 11.53 மில்லியன் செலவில் நிறைவு செய்யப்பட்டு 2016ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், உரிய அறிக்கை ரூபா 15.18 மில்லியன் செலவில் பொது நிறுவனம் ஒன்றிடம் மீளாய்வு நோக்கத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. குறித்த பகுதியின் வெள்ளப் பெருக்கு நிலைமையை கருத்தில் கொண்டு மேலே குறிப்பிட்ட பொது நிறுவனத்திடம் 2017 ஜூன் 01ல் ரூபா 67.79 மில்லியன் செலவில் விபரமான நீரியல் ஆய்வினை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2017 திசம்பர் 31 வரை செயற்திட்ட கண்காணிப்பு பிரிவினால் குறித்த பொது நிறுவனத்துடன் முறையான எவ்வித உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மேலும் குறித்த பொது நிறுவனத்தினால் 2018 ஜுன் 30ல் கூட எவ்வித அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1980 ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயல்பாடுகளை அமுல்படுத்தமுதல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட வேண்டும் இருப்பினும் இது 2018 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், நடைபாதைக்கான அளவை வேலை மற்றும் ஆரம்பகட்ட வடிவமைப்பு தயாரிப்பு போன்ற செயல்பாடுகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.